

# வான்கோழி வளர்ப்பின் சிறப்புகள்





- விலை மதிப்புமிக்க, சுவையான, நறுமணம் மிகுந்த இறைச்சியை வழங்குகிறது.
- நம் நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் வளர்த்து பயன்பெறலாம்.
- வீடுகளின் புறக்கடையில் அல்லது கொல்லைப்புறத்தில் எளிதாக வளர்க்கலாம்.
- மிகவும் இலாபகரமான தொழிலாக நடத்தலாம்.
- குறைந்த முதலீட்டில் அதிக வருமானம் பெற வான்கோழி வளர்ப்பு உகந்தது.
- நோய் எதிர்ப்பு சக்தி அதிகம் என்பதால் தடுப்பூசிகளுக்கான செலவும் குறைவு.
- பெரிய பண்ணைகளில் வான்கோழிகளை செயற்கை முறை கருவூட்டல் மூலமும் இனவிருத்தி செய்யலாம். ஆதலால் ஆண்கோழிகளை பராமரிக்கும் செலவைக் குறைக்கலாம்.
- இறைச்சியினை சுலபமாக சுத்தம் செய்யலாம்.

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்
சென்னை – 600 051

# வான்கோழி இரகங்கள்

## அகன்ற மார்புடைய ப்ரான்ஸ்

- இறகுகள் வெண்கல நிறத்தில் இருக்கும்.
- உடல் எடை : சேவல் : 7கிலோ; பெட்டை: 4 கிலோ (4 மாத வயதில் முறையான பராமரிப்பில்).

## அகன்ற மார்புடைய வெள்ளை

- தூய வெண்மை நிறத்தில் இருக்கும்.
- அகன்ற மார்புடைய ப்ரான்ஸ் மற்றும் வெள்ளை ஹாலந்து கலப்பு இனங்களின் ரகமாகும்.
- உடல் எடை : சேவல் : 6 கிலோ; பெட்டை : 4 கிலோ (4 மாத வயதில் முறையான பராமரிப்பில்).

## பெல்ட்ஸ்வில்லி சிறிய வெள்ளை

- அமெரிக்க விவசாய ஆராய்ச்சி நிலையம், பெல்ட்ஸ்வில்லில் உருவாக்கப்பட்டதாகும்.
- வெள்ளை நிறத்தில் இருக்கும்.
- முட்டை உற்பத்தித் திறன், கருவளர்த்தன்மை, குஞ்சு பொரிக்கும் திறன் ஆகிய பண்புகள் அதிகம்.
- உடல் எடை சேவல் : 3.5 கிலோ; பெட்டை: 2.5 கிலோ (4 மாத வயதில் முறையான பராமரிப்பில்).

## நந்தனம் வான்கோழி – 1

- கோழியின ஆராய்ச்சி நிலையம் நந்தனத்தில் கறுப்பு நாட்டு வான்கோழிகளை அயல் நாட்டு பெல்ட்ஸ்வில்லி சிறிய வெள்ளை வான்கோழிகளுடன் கலப்பினம் செய்து உருவாக்கப்பட்ட வான்கோழி வகையாகும்.
- பிற வான்கோழிகளைக் காட்டிலும் குஞ்சு பொரிப்புத்திறன் 10% அதிகம்.
- மிருதுவான சுவையான இறைச்சி.
- அதிக முட்டை உற்பத்தி.
- தமிழகத்தின் தட்பவெப்ப நிலைக்கு ஏற்றது.
- சிறகுகள் கறுப்பு மற்றும் வெள்ளை நிறத்தில் இருக்கும்.

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்
சென்னை – 600 051



# வான்கோழி வளர்ப்பு முறைகள்

## வான்கோழி வளர்ப்பு முறைகள்

- மேய்ச்சல் முறை.
- கொட்டில் முறை (இருவகைப்படும்).

### மேய்ச்சல் முறை

- புறக்கடை மற்றும் இதர நிலப் பகுதியில் மேய்க்கும் முறையாகும்.
- இரவு நேரங்களில் மட்டும் வான்கோழிகள் கொட்டகையில் அடைக்கப்படுகின்றன.
- ஒரு ஏக்கர் (வேலியிட்ட) நிலத்தில் 200 முதல் 250 வளர்ந்த வான்கோழிகளை வளர்க்கலாம்.
- மேய்ச்சல் தரையை சுழற்சி முறையில் மாற்றி உபயோகப்படுத்தல் நல்லது.

## கொட்டில் முறை வளர்ப்பு

### ஆழ்கூள முறை

- வான்கோழிக் குஞ்சு பொரித்த நாள் முதல் விற்பனை செய்யும் நாள் வரை கொட்டகையினுள்ளே வளர்க்கப்படுகின்றன
- இறைச்சிக் கோழி வளர்ப்புக்கான கொட்டகை அமைப்பே வான்கோழி வளர்ப்புக்கும் சிறந்தது.
- தென்னங்கீற்றுகள் அல்லது அஸ்பெஸ்டாஸ் அல்லது ஓடுகள் கொண்டு கூரை அமைத்துக் கொள்ளலாம்.
- ஆழ்கூளமாக நெல் உமி, நிலக்கடலை மேலோடுகள் மற்றும் மரத்தூள் போன்றவற்றை உபயோகப்படுத்தலாம்.
- ஆழ்கூளப் பொருளை 6 அங்குல உயரத்திற்கு தரையிலிருந்து சீராக பரப்பி விட வேண்டும்.
- ஆழ்கூள தூசிகள் மற்றும் அம்மோனியாவின் தாக்கத்திலிருந்து வான்கோழிகளை பாதுகாக்க தினமும் ஆழ்கூளத்தை கிளறிவிட வேண்டும்.
- ஆழ்கூளம் அதிக ஈரம் ஆகாமல் பராமரித்தல் அவசியம். ஈரமானால் 200 சதுர அடிக்கு 4 கிலோ சுண்ணாம்புத்தூளை தூவி கிளறிவிடுவது அவசியம்.

### கூண்டு முறை

- ஒரு நாள் முதல் 8 வாரங்கள் வரை கூண்டு முறையில் வளர்க்கலாம்.
- கூண்டின் அகலம் 3 அடியாகவும், உயரம் 2 அடியாகவும் இருக்க வேண்டும்.
- கூண்டு தரையிலிருந்து மூன்று அடி உயரத்தில் பொறுத்தப்பட வேண்டும்.

# இனவிருத்தி வான்கோழிகள் பராமரிப்பு

வான்கோழிகள் சுமார் 6 மாத வயதில் முட்டையிடத் துவங்கி பின்னர் 7 முதல் 8 மாத காலம் சுமார் 130 முட்டைகள் வரை இடும்.

| பண்புகள் | ஆண் வான்கோழி | பெண் வான்கோழி |
|---|---|---|
| எடை | அதிகம் | குறைவு |
| முகத்தசை / தசைத்திரள் (Caruncles) | உண்டு | இல்லை |
| அலகுக்கொண்டை (Snood or dewbill) | பெரியது | சிறியது |
| குறுந்தாடி (Beard) | மார்பகப்பகுதியில் கரிய நிறத்தில் காணப்படும் | இல்லை |

- மார்பு எலும்புகள் வளைந்து இருத்தல் கூடாது.
- இனவிருத்திக்கான வான்கோழிகள், எவ்வித குறைபாடுகளுமின்றி இருத்தல் வேண்டும்.

## இடவசதி

- ஒரு வான்கோழிக்கு 5 சதுர அடி இடவசதி அளிக்க வேண்டும்.
- 10 வான்கோழிகளுக்கு ஒன்றரை அடி விட்டம் உள்ள தீவனத் தட்டு மற்றும் தண்ணீர் அவசியம்.

## இனச் சேர்க்கை

- மிகவும் வீரியமுள்ள சேவல் ஒன்றுடன் 4 முதல் 5 பெட்டை வான்கோழிகளை இனச்சேர்க்கை செய்யலாம்.

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்
சென்னை – 600 051

# வான்கோழிக் குஞ்சு பராமரிப்பு

## வான்கோழிக்குஞ்சுகளை தருவிக்கும் முன் செய்ய வேண்டியவை

- கொட்டகை மற்றும் உபகரணங்களை முன்பே சுத்தம் செய்திட வேண்டும்

## பண்ணை வீடு பராமரிப்பு முறைகள்

- உபயோகித்த ஆழ்கூளத்தை அப்புறப்படுத்த வேண்டும்.
- தீ உமிழ்ப்பான் (flame gun) கொண்டு கொட்டகையின் எல்லாப் பகுதிகளையும் சுத்தம் செய்தல் வேண்டும்.
- தரையை சுத்தமாக கழுவி விடவேண்டும்.
- அரை சதவீத கிருமிநாசினி திரவ கரைசலால் கொட்டகையின் தரை, தீவன தட்டுக்கள், தண்ணீர் தட்டுக்கள் மற்றும் இதர உபகரணங்களை சுத்தம் செய்ய வேண்டும்.
- கொட்டகையின் சுவர்களில் சுண்ணாம்பு அடிக்க வேண்டும்.
- நெல் உமியை பண்ணை வீட்டின் தரையில் 4 அங்குல உயரத்துக்கு சமமாகப் பரப்பி அதன் மேல் பழைய செய்தித்தாள்களை பரப்பி விட வேண்டும்.
- 6 அடி விட்டமும், 1 அடி உயரமும் உள்ள அடைகாப்பானுக்குள் 75 முதல் 100 வான்கோழிக்குஞ்சுகளை பராமரிக்கலாம்.
- தண்ணீர் மற்றும் தீவனத் தட்டுக்களை அடைப்பானுக்குள் மாற்றி வைக்க வேண்டும்

## தீவன பராமரிப்பு

- தீவனம் தயாரிக்க கோழி தீவன மூலப்பொருட்களையே பயன்படுத்தலாம்.
- ஒரு நாளைக்கு நான்கு முறையாவது குறைந்த அளவுகளில் தீவனம் அளிக்க வேண்டும். 10 குஞ்சுகளுக்கு ஒரு அவித்த முட்டையும், பொடி செய்த பொட்டுக் கடலையும் கொடுக்கலாம்.
- ஆரம்ப நாட்களில் தீவனத்தை சமமான பிளாஸ்டிக் தட்டில் நிறைய வைத்து தீவனம் உட்கொள்ள வைத்திட வேண்டும்.

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்
சென்னை – 600 051

# வான்கோழிகளுக்கான ஊட்டச்சத்துக்கள்



| ஊட்டச் சத்துக்கள் | இளம் வான்கோழிக் குஞ்சு தீவனம் (0 முதல் 4 வார வயது வரை) | வான்கோழிக் குஞ்சு தீவனம் (5 முதல் 8 வார வயது வரை) | வளர் வான்கோழி தீவனம் (9 முதல் 16 வார வயது வரை) | வளர் வான்கோழி தீவனம் (17 முதல் 24 வார வயது வரை) | இனவிருத்தி வான்கோழி தீவனம் (25 வார வயதிற்கு மேல்) |
|---|---|---|---|---|---|
| எரிசக்தி (கிலோ கிராம்/ தீவனம்) | 2804 | 2800 | 2700 | 2700 | 2600 |
| புரதம் (%) | 28 | 26 | 21 | 16 | 15.00 |
| கால்சியம் (%) | 1.27 | 1.11 | 0.76 | 0.85 | 2.34 |
| பாஸ்பரஸ் (%) | 0.6 | 0.45 | 0.47 | 0.40 | 0.60 |
| லைசின் (%) | 1.72 | 1.54 | 1.06 | 0.73 | 0.66 |
| மித்தியோனின் | 0.5 | 0.46 | 0.41 | 0.35 | 0.34 |

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்
சென்னை – 600 051



# வான்கோழிகளுக்கான மாதிரி தீவனம் (%)

| மூலப்பொருட்கள் | இளம் வான்கோழி குஞ்சு தீவனம் (0 முதல் 4 வார வயது வரை) | வான்கோழி குஞ்சு தீவனம் (5 முதல் 8 வார வயது வரை) | வளர் வான்கோழி தீவனம் (9 முதல் 16 வார வயது வரை) | வளர் வான்கோழி தீவனம் (17 முதல் 24 வார வயது வரை) | இனவிருத்தி வான்கோழி தீவனம் (25 வார வயது மேல்) |
|---|---|---|---|---|---|
| மக்காச்சோளம் | 44 | 47 | 52 | 57 | 57 |
| எண்ணெய் நீக்கிய அரிசி தவிடு | 0 | 0 | 12 | 19 | 15 |
| சோயா | 45 | 36 | 20 | 6.5 | 4 |
| சூரியகாந்தி பிண்ணாக்கு | 0 | 7 | 6 | 8 | 10 |
| கருவாடு | 9.5 | 9 | 9 | 8 | 8 |
| தாது உப்புக்கலவை | 0.5 | 0.5 | 0.5 | 1.5 | 2 |
| டைகால்சியம் பாஸ்பேட் பவுடர் | 1 | 0.5 | 0.5 | – | 1 |
| கிளிஞ்சல் | – | – | – | – | 3 |
| மொத்தம் | 100 | 100 | | | 100 |



மக்காச்சோளம்



அரிசி தவிடு



கருவாடு



கிளிஞ்சல்



சூரியகாந்தி பிண்ணாக்கு



கால்சைட் பவுடர்



# வான்கோழிகளைத் தாக்கும் நோய்களும் தடுப்பு முறைகளும்

## இராணிக்கெட் நோய் (வெள்ளைக் கழிச்சல் நோய்)

★ பச்சை மற்றும் வெள்ளை நிறத்தில் எச்சமிடும்.
★ முட்டையின் தரம் குறையும்.
★ முட்டைகளின் எண்ணிக்கையும் வெகுவாக குறைந்து விடும்.
★ அதிக எண்ணிக்கையில் இறப்பு ஏற்படும்.

## தடுப்பு முறைகள்

★ தடுப்பூசி : முதல் வாரம் ; 35வது நாள், 8 வது வாரத்தில் அளிக்க வேண்டும்.

## அம்மை நோய்

★ பாதிக்கப்பட்ட வான்கோழிக்குஞ்சுகளின் மூக்கு, வாய், கண், இமை ஆகிய பகுதிகளில் கொப்புளங்கள் போன்று கட்டிகள் தோன்றும்.

## தடுப்பு முறைகள்

★ தடுப்பூசி : 6வது வாரத்தில் அளிக்க வேண்டும்.
★ வெளிப்பூச்சாக போரிக் அமில களிம்பை வேப்பெண்ணெயில் கலந்து தடவலாம்.
★ மஞ்சள், வேப்பிலை அரைத்துத் தடவலாம்.

## தொற்றும் பெருமூச்சுக்குழல் நோய்

★ இளம் வான்கோழிக்குஞ்சுகளையே அதிகம் தாக்கக் கூடியது.
★ மூக்கின் உட்பகுதி பாதிக்கப்படும்; சுவாசப் பாதை முழுவதும் சளி அடைத்துக் கொள்ளும். மூச்சு விடுவதில் சிரமம் ஏற்படும்.

## கழிச்சல் நோய்

★ 35 முதல் 50 நாட்களுக்குட்பட்ட வான்கோழிக் குஞ்சுகளைத் தாக்கும்.
★ இரத்தப் போக்கு அதிகமாக இருப்பதால், வான்கோழிகள் அதிகம் இறப்பதற்கு வாய்ப்புண்டு.

## கருப்புத்தலை நோய்

★ பாதிக்கபட்ட வான்கோழிகள் மஞ்சள் நிறத்தில் எச்சமிடும்.
★ உருண்டைப் புழுவின் முட்டைகள் மூலமாக தீவனத்துடன் கலந்து உடலினுள் சென்று நோயை உண்டாக்குகிறது.

## தடுப்பு முறைகள்

★ குடற்புழு நீக்க மருந்து தவறாமல் அளிக்க வேண்டும்.



# வான்கோழிகளைத் தாக்கும் நோய்களும் தடுப்பு முறைகளும்

பொதுவாக வான்கோழிகளுக்கு தடுப்பூசி ஏதும் கொடுக்கப் படுவதில்லை. மேலும் வான்கோழிகளை மற்ற கோழிகள் வளர்க்கும் இடத்திற்கு அருகாமையில் வளர்க்கும்போதோ அல்லது மற்ற கோழிகளுக்கு நோய்கள் வந்தாலோ தடுப்பூசிகள் அளிப்பது அவசியம்.

## வான்கோழிகளுக்கான தடுப்பூசி அட்டவணை

| தடுப்பூசியின் பெயர் | வயது | அளிக்கும் முறை |
|---|---|---|
| லசோட்டா (இராணிக்கெட் நோயைத் தடுக்க) | 7 மற்றும் 28 வது நாள் | • நாசித்துவாரம்<br>• குடிநீர் |
| ஆர்.டி.வி.கே | 8 மற்றும் 16 வது வாரம் | • இறக்கையின் தோலுக்கடியில் |
| கோழிகாலரா (தேவைப்பட்டால்) | 5 வது வாரம் | • இறக்கையின் தோலுக்கடியில் |
| அம்மை நோய் | 6 வது வாரம் | • தொடை பகுதியில் |

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்
சென்னை – 600 051



# வான்கோழிப் பண்ணைப் பொருளாதாரம்



## இறைச்சி வான்கோழி வளர்ப்பு மாதிரிப் பண்ணைப் பொருளாதாரம்
## (100 வான்கோழிகள் – 16 வாரங்கள் வரை)

| I. நிரந்தர செலவுகள் | ரூ. பை |
|---|---|
| கொட்டகை கட்டும் செலவு<br>ஒரு வான்கோழிக்கு தேவைப்படும் இடவசதி 4 சதுர அடி எனில் 100 வான்கோழிகளுக்கான இடவசதி 400 சதுர அடியாகும். 1 சதுர அடிக்கான கட்டட செலவு ரூபாய் 75 எனில் 400 சதுர அடிக்கான கட்டட செலவு | 30,000.00 |
| உபகரணங்கள் வாங்க செலவு (தீவன கலன், தண்ணீர் கலன், தடுப்பு வேலி மற்றும் இதர கருவிகள் ஒரு வான்கோழிக்கு ரூ.15 வீதம்) | 1,500.00 |
| மொத்தம் | 31,500.00 |
| II. தொடர் செலவுகள் | |
| நூறு வான்கோழிக்குஞ்சுகளின் விலை<br>(ஒரு வான்கோழி குஞ்சின் விலை ரூ.60) | 6,000.00 |
| தீவன செலவு<br>ஒரு வான்கோழிக்கு ஆகும் தீவன செலவு<br>(1 கிலோ தீவனம் ரூ.18 ரூபாய் எனில் 10.25 கிலோ தீவனத்திற்கு ரூ 184.50)<br>(2.5% இறப்பு விகிதம்) | 17,990.00 |
| மருந்து மற்றும் தடுப்பூசி செலவு<br>(ஒரு வான்கோழி ரூ.10 வீதம்) | 1,000.00 |
| மொத்தம் | 24,990.00 |
| III. வரவு | |
| 95 வான்கோழி விற்பனை மூலம் கிடைக்கும்<br>வருமானம் (5% இறப்பு விகிதம்) ஒரு கிலோ வான்கோழியின் விலை ரூபாய் 150 ஆகும் ஆகவே 3 கிலோ எடையுள்ள வான் கோழியின் விலை ரூபாய் 450 எனில் 95 வான்கோழிகளின் விலை | 42,750.00 |
| IV. மொத்த இலாபம் | |
| (மொத்தம் வரவு – தொடர் செலவுகள்) | 17,760.00 |
| V. நிகர இலாபம் | |
| ஒரு வான்கோழிக்கான உற்பத்தி செலவு<br>ஒரு கிலோவுக்கான உற்பத்தி செலவு<br>ஒரு வான்கோழியிலிருந்து கிடைக்கும் மொத்த இலாபம்<br>ஒரு கிலோ உயிருள்ள வான்கோழி விற்பனையில் கிடைக்கும் இலாபம் | 250.00<br>83.00<br>187.00<br>62.00 |

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்
சென்னை – 600 051

# வான்கோழி உற்பத்தித் திறன்



| | |
|---|---|
| ஆண் : பெண் வான்கோழிகளின் சேர்க்கை விகிதம் | 1 : 5 |
| முட்டையின் சராசரி எடை | 75 கிராம் |
| ஒருநாள் வான்கோழிக்குஞ்சின் எடை | 50 கிராம் |
| பருவம் அடையும் (முட்டையிடும்) வயது | 24–28 வாரங்கள் |
| ஒரு பெட்டை வான்கோழியிலிருந்து பெறப்படும் முட்டைகளின் சராசரி எண்ணிக்கை ( ஒரு வருடத்தில்) | 120–140 |
| ஒருபெட்டை வான்கோழியிலிருந்து கிடைக்கும் குஞ்சுகளின் சராசரி எண்ணிக்கை | 60–70 |
| அடை காக்கும் (குஞ்சுப் பொரிக்கும்) காலம் | 28 நாட்கள் |
| அதிக முட்டையிடும் வயது | 28–45 வாரங்கள் |
| விற்பனை வயது | 16–20 வாரங்கள் |
| ஆண் வான்கோழி – விற்பனை வயதில் எடை | 3.5 கிலோ |
| பெண் வான்கோழி – விற்பனை வயதில் எடை | 2.5 கிலோ |
| ஆண் வான்கோழிகள் – விற்பனை வரை உண்ணும் தீவனம் | 12.25 கிலோ |
| பெண் வான்கோழிகள்– விற்பனை வரை உண்ணும் தீவனம் | 8.25 கிலோ |
| தீவன மாற்றுத்திறன் (16 வார வயது வரை) | 3.5 கிலோ / ஒரு கிலோ உடல் எடை வளர்ச்சிக்கு |